விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆனி - 12 சனி 26.06.2021 மலர் - 2, இதழ் - 81

# சென்னை மாநகராட்சி தடுப்பூசி முன்பதிவு

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட கொரோனா தடுப்பூசி மையங்களில், தடுப்பூசி செலுத்திக் கொள்ள முன்பதிவு செய்ய ஏதுவாக, https://www.chennaicorporation.gov.in/gcc/covid details/ என்ற இணையதள இணைப்பு துவங்கப்பட்டுள்ளது. 'இதன் மூலம் பொதுமக்கள், தங்கள் பகுதிக்குட்பட்ட தடுப்பூசி மையத்தினையும், நேரத்தையும் முன்பதிவு செய்து கொள்ளலாம். மேலும், 0444612 2300 என்ற தொலைபேசி எண்ணிலும், 94999 33644 என்ற வாட்ஸ் அப் எண்ணிலும் தொடர்புகொண்டு தடுப்பூசி மையங்கள், நேரம் போன்றவற்றை முன்பதிவு செய்யலாம். அந்தந்த மையங்களில் ஒதுக்கப்படும் தடுப்பூசிகளில் மூன்றில் ஒரு பங்கு மட்டுமே இணையதளம், தொலைபேசி வாயிலாக முன்பதிவு செய்யும் நபர்களுக்கு ஒதுக்கப்படும். மீதமுள்ள தடுப்பூசிகள் நேரடியாக வந்து தடுப்பூசி செலுத்திக் கொள்ளும் நபர்களுக்கு வழங்கப்படும்' என்று சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது.



விஜயபாரதம்

# கிஷோர் கே.ஸ்வாமி மீது குண்டர் சட்டம்

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட தி.மு.க தலைவர்கள் குறித்து சமூகவலைத் தளங்களில் அவதூறு பரப்பியதாக தி.மு.க ஐ.டி பிரிவு சார்பில் அளிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில், இரவோடு இரவாக சமூக வலைத்தள பிரபலம் கிஷோர் கே. சுவாமியை கைது செய்தது காவல்துறை. நீதிமன்ற காவலில் வைக்கப்பட்ட கிஷோர் கே. சுவாமியின் மீது பல்வேறு வழக்குகள் இருப்பதால், அவர் மீது குண்டர் சட்டத்தை போட்டுள்ளனர் காவல்துறையினர். பிரதமர் மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா உள்ளிட்ட தேசியத் தலைவர்கள், தமிழக பா.ஜ.க தலைவர்கள், அ.தி.மு.க முதல்வர், அதன் தலைவர்கள் என பலரையும் தரம் தாழ்ந்தும் அவதூறாகவும் பேசிய ஆ. ராசா, சீமான், திருமுருகன் காந்தி, திருமாவளவன், வை.கோ, சுந்தரவள்ளி உள்ளிட்டோர் மீது இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காத தமிழகக் காவல்துறை, கிஷோர் கே சுவாமி மீது மட்டும் அவசர அவசரமாக எடுத்த கைது நடவடிக்கைக்கு பா.ஜ.க உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள், சமூக அமைப்புகள் கடும் கண்டனத்தை தெரிவித்து வருகின்றனர்.



விஜயபாரதம்

# ஹிந்து முன்னணியினர் ஆர்ப்பாட்டம்



விஜயபாரதம்

கொரோனா நோய் தொற்று பரவலின் காரணமாக கடந்த 50 நாட்களுக்கு மேலாக தமிழகத்தின் அனைத்து வழிபாட்டு தலங்களிலும் பகதர்கள் வழிபாடு செய்ய தமிழக அரசு தடைவித்துள்ளது. தற்போது தமிழக அரசு பல தளர்வுகளை அறிவித்துள்ளது. முக்கியமாக, மக்களை சீரழிக்கும் மதுபானக்கடைகள் திறக்க அனுமத்துள்ளது. ஆனால், மக்கள் மன அமைதிக்காகவும், வழிபாடு செய்யவும், வேண்டுதல்களை நிறைவேற்றுவதற்காகவும் செல்லும் கோயில் உள்ளிட்ட வழிபாட்டு தலங்களை திறக்க மட்டும் அனுமதிக்காமல் உள்ளது. இந்நிலையில், தமிழகத்தில் ஹிந்து அறநிலையத்துறையின் கட்டுபாட்டில் உள்ள அனைத்து கோயில்களையும் பக்தர்களின் வழிபாட்டிற்கு திறந்து அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறித்தி ஹிந்து முன்னணியினர், கோயில்கள் முன்பாக கற்பூரம் ஏற்றி ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர். கொரோனா காரணமாக முகக் கவசம் அணிந்து சமூக இடைவெளியுடன் இந்த போராட்டத்தில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# லயோலாவில் பாலியல் தொல்லை



விஜயபாரதம்

சென்னை, லயோலா கல்லூரியில், 2007 முதல் பணியாற்றி வந்த பேராசிரியை ஒருவருக்கு, அக்கல்லூரியின் தமிழ்த்துறை தலைவராக பணியாற்றிய அந்தோணி ராஜராஜன், பாலியல் தொல்லை கொடுத்து உள்ளார். இது குறித்து அந்த பேராசிரியை, கல்லூரியில் உள்ள பாலியல் வன்கொடுமைக்கு எதிரான கமிட்டியில் புகார் அளித்துள்ளார். இக்கமிட்டி, 2013 ஏப்ரலில் தனது அறிக்கை அளித்தது. ஆனால், அந்தோணி ராஜராஜன் மீது எந்த நடவடிக்கையும் இல்லை. கல்லூரி முறையான நடவடிக்கை எடுக்காததால், பேராசிரியை காவல்துறையில் புகார் அளித்தார். இதையடுத்து புகார் அளித்த பேராசிரியையை லயோலா கல்லூரி நிர்வாகம் கல்லூரியில் இருந்து நீக்கியது. இதனையடுத்து அவர், சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். நீதிமன்றம் பிறப்பித்த இடைக்கால உத்தரவில், அந்தோணி ராஜராஜனின் ஓய்வுத் தொகை, பணப் பலன்களை பேராசிரியைக்கு நிவாரணமாக வழங்க உத்தரவிட்டது. இவ்வழக்கில், தற்போது டெல்லியில் உள்ள தேசிய மகளிர் ஆணையம், 'பேராசிரியைக்கு ஆதரவாக சென்னை உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை செயல்படுத்தி விட்டீர்களா, புகார் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பது குறித்து பதில் அளிக்க வேண்டும்' என்று சென்னை லயோலா கல்லூரிக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

# திருப்பூரில் வங்கதேசத்தவர் கைது



விஜயபாரதம்

திருப்பூர், அம்மாபாளையம் ராக்கியா பாளையத்தைச் சேர்ந்த மணிகண்டன், தன் வீட்டை கடந்த ஏப்ரலில் ஷிமுல் காஜி என்பவருக்கு வாடகைக்கு விட்டார். ஆதார் கார்டில் ஈரோடு மாவட்ட முகவரி இருந்தது. ஆனால், அவர் வங்க தேசத்தவர் என பின்னர் தெரிய வந்தது. அது குறித்து, ஷிமுல் காஜியிடம் கேட்டபோது, அவருடன் சேர்ந்து, அவரது நண்பர்கள் சைபுல் இஸ்லாம், மன்னன் மோலல் ஆகியோரும் சேர்ந்து மணிகண்டனை தாக்கியுள்ளனர். இது குறித்து மணிகண்டன் அளித்த புகாரின் பேரில், காவல்துறையினர் மூவரையும் பிடித்து விசாரித்தனர். அதில் அவர்கள் மூவரும் வங்க தேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும் தமிழகத்தில் உரிய ஆவணங்கள் இல்லாமல் தங்கியிருப்பதும் தெரிய வந்தது. கொலை மிரட்டல், சட்டவிரோத குடியேற்றம் உள்ளிட்ட ஏழு பிரிவுகளில் வழக்கு பதிந்து, மூவரையும் கைது செய்து சிறையில் அடைத்தனர். அவர்கள் பயங்கரவாதிகளா என்ற கோணத்திலும் விசாரணை நடக்கிறது.

# வழிபாட்டுத் தலங்கள் திறப்பு



விஜயபாரதம்

கேரளாவில் கொரோனா பரவல் படிப்படியாக குறைந்து வருகிறது. இதையடுத்து ஊரடங்கில் பல்வேறு தளர்வுகள் அறிவிக்கப்பட்டன. அங்கு வழிபாட்டு தலங்களை திறக்கவும் அரசு அனுமதி வழங்கியது. அதன்படி கோயில்கள், தேவாலயங்கள், மசூதிகள் உட்பட அனைத்து வழிபாட்டுத் தலங்களும் வழிகாட்டு நெறிமுறைகளின்படி திறக்கப்பட்டன. குருவாயூர் கோயிலில் ஆன்லைன் முன்பதிவு அடிப்படையில் பக்தர்கள் தரிசனத்திற்கு அனுமதிக்கப்பட்டனர். திருவனந்தபுரம் பத்மநாபசாமி கோயிலில் ஒரு நேரத்தில் 15 பேருக்கு மட்டுமே அனுமதி என்ற கட்டுப்பாட்டுடன் பக்தர்கள் தரிசனத்திற்கு அனுமதிக்கப்பட்டனர். சபரிமலை ஐய்யப்பன் கோயிலில் பக்தர்களை அனுமதிப்பது குறித்து ஆலோசனை நடத்திய திருவிதாங்கூர் தேவஸ்தானம், ஆடி மாத பூஜையையொட்டி ஆன்லைன் முன்பதிவு அடிப்படையில் பக்தர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என அறிவித்துள்ளது.

# சி.ஏ.ஜி. அறிக்கை



விஜயபாரதம்

இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறை தலைவரின் அறிக்கை, சட்டப்பேரவையில் அனைத்து உறுப்பினர்களின் பார்வைக்கும் வைக்கப்பட்டது. இந்த அறிக்கையின் மூலம், கடந்த அ.தி.மு.க அரசின் ஆட்சிக் காலத்தில், 201718, 201819 ஆகிய நிதியாண்டுகளில் பொதுத்துறை நிறுவனங்களில் மட்டும் 34,374 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது தெரிய வந்தது. தமிழகத்தில் மொத்தம் 75 பொதுத்துறை நிறுவனங்கள் உள்ளன. அவற்றில், 68 செயல்படும் அரசு நிறுவனங்கள், 1 சட்டமுறைக் கழகம், 6 செயல்படாத அரசு நிறுவனங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# குண்டு வெடிப்பு குற்றவாளிகள் கைது



விஜயபாரதம்

ஜனவரி 29, 2021 அன்று டெல்லியின்மையப்பகுதியில், உள்ள இஸ்ரேல் தூதரகத்திற்கு வெளியே ஒரு ஐ.இ.டி குண்டுவெடிப்பு நடந்தது. இதில் உயிரிழப்புகள் ஏற்படவில்லை, எனினும் அப்பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த ஐந்து கார்கள் சேதமடைந்தன இந்த குண்டுவெடிப்புத் தொடர்பாக கார்கில் பகுதியை சேர்ந்த நாசீர் உசேன், சுல்பிகர் அலி வாஜீர், அயாஸ் உசேன், முசாம்மில் உசேன் ஆகிய நான்கு இளைஞர்களை டெல்லி காவல்துறையின் சிறப்புப் பிரிவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர். இந்த நான்கு பேரை காவலில் எடுத்து விசாரிக்க தேசிய புலனாய்வு முகமையான என்.ஐ.ஏ விரைவில் நடவடிக்கை எடுக்கலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.


# போலி கணக்குகளை முடக்க காலக்கெடு



விஜயபாரதம்

சமூக வலைதளங்களில் பிரபலங்களின் பெயரில் போலியான கணக்குகளை துவங்கும் போக்கு பரவலாக காணப்படுகிறது. அவர்களின் பெயரில் போலி செய்திகளும் பரப்பப்படுகின்றன. அதனை பலர் பின்தொடர்வதும், நம்பி ஏமாந்துபோவதும்கூட நடக்கிறது. பிரபலங்கள் மட்டும்தான் என்றில்லை. பல சாமானியர்களின் பெயரிலும் போலி கணக்குகள் துவங்கி, அவர்களின் நண்பர்கள் வட்டத்தில் பணம் கேட்டு மோசடி செய்வதும் சமீப காலமாக அதிகரித்து உள்ளன. இதற்கு முடிவுகட்டும் விதமாக, தகவல் தொழில்நுட்ப விதிகளில் புதிய உத்தரவை மத்திய அரசு பிறப்பித்துள்ளது. அதன்படி, முகநூல், டுவிட்டர், யூ டியூப் உள்ளிட்ட சமூக வலைதளங்களை பயன்படுத்தும் பயனாளர்களின் பெயர்களில் துவங்கப்படும் போலி கணக்குகள் குறித்து சம்பந்தப்பட்டவர்களோ அல்லது அவர்கள் சார்பாகவோ புகார் அளிக்கப்பட்டால், 24 மணி நேரத்திற்குள் அந்த போலி கணக்குகள் முடக்கப்பட வேண்டும் என மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

# துணைவேந்தரானார் கர்ணம் மல்லேஸ்வரி




விஜயபாரதம்

டெல்லி விளையாட்டுப் பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தராக கர்ணம் மல்லேஸ்வரி நியமிக்கப்பட்டுள்ளார். பளுதூக்குதல் பிரிவில் ஒலிம்பிக்கில் இந்தியாவுக்கு பதக்கம் வென்ற முதல் பெண் வீராங்கனையான கர்ணம் மல்லேஸ்வரி, தற்போது இந்திய உணவுக் கழகத்தில்(எப்.சி.ஐ) தலைமை பொது மேலாளராக பணியாற்றி வருகிறார். 1994ம் ஆண்டில் அர்ஜுனா விருது, 1999ல் ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருது, 1999ல் பத்மஸ்ரீ விருது போன்ற மதிப்புமிக்க விருதுகள் அவருக்கு வழங்கப்பட்டன. ஆந்திர மாநிலம் ஸ்ரீகாகுளத்தை பூர்வீகமாகக் கொண்ட மல்லேஸ்வரி 1993, 1994ல் உலக சாம்பியன்ஷிப்பில் இரண்டு தங்கம், இரண்டு வெள்ளி, 2000ல்சிட்னி ஒலிம்பிக்கில் பளுதூக்குதலில் வெண்கலம் உட்பட பல சர்வதேச பதக்கங்களை வென்றார்.

## சர்ச்சையில் சிக்கும் ராபர்ட் வத்ரா

காங்கிரஸ் இடைக்காலத் தலைவர் சோனியா காந்தியின் மருமகனான ராபர்ட் வாத்ரா, கடந்த புதன்கிழமை காலை காரில் தனது அலுவலகத்திற்குச் சென்று கொண்டிருந்தபோது பராபுல்லா மேம்பாலம் அருகே அவரது கார் திடீரென வேகம் குறைந்தது. இதனால், பின்னால் இருந்து மற்றொரு கார், ராபர்ட் வத்ராவின் கார் மீது மோதியது. ராபர்ட்டின் டிரைவர் காரை ஓட்டி வந்ததாக கூறப்படுகிறது. இதனால், டெல்லி காவல்துறை ஆபத்தான வகையில் வாகனம் ஓட்டியதாக வழக்குப் பதிவு செய்துள்ளனர். முன்னதாக, கடந்த 7 ஆண்டுகளுக்கு முன்பு தெற்கு டெல்லியில் ராபர்ட் வாத்ராவின் காரை முந்தி சென்ற ஒரே காரணத்திற்காக ஒரு நபரை துரத்திப் பிடித்து வழக்குப் பதிவு செய்தது காவல்துறை. அந்த நபர், அப்பகுதியில் வி.ஐ.பிக்கள் போக்குவரத்து நடைபெறுவது குறித்து தனக்குத் தெரியாது என்று கூறினார் என்பது குறிப்பிடத்தக்கது.

விஜயபாரதம்



## இனி அதிகாரிகளும் பொறுப்பு

தேசிய நெடுஞ்சாலை, பாலங்கள், சாலைகள், உட்கட்டமைப்புகள் அமைக்கும்போது உரிய தரக்கட்டுப்பாடுகளை பின்பற்ற வேண்டும். விதிமுறைகளை பின்பற்றாமல் உரிய கண்காணிப்புகள் இன்றி தவறு நிகழ்ந்தால் நெடுஞ்சாலை அலுவலகத்தின் மண்டல அலுவலக அதிகாரிகள், பொறியாளர்கள், தேசிய நெடுஞ்சாலை ஆணையம், உட்கட்டமைப்பு மேம்பாட்டு ஆணையம் ஆகியவைகளே பொறுப்பேற்க வேண்டும். பணிகளில் அலட்சியம் காட்டும் அதிகாரிகளின் தவறு மூன்று முறைக்கு மேல் இருக்கும் பட்சத்தில் அவர்களுக்கு கடுமையான அபராதம் விதிக்கப்படும் என மத்திய நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்தின் சுற்றறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக, இக்குறைபாடுகளுக்கு ஒப்பந்ததாரர், தனிப்பட்ட பொறியாளர், கண்காணிப்புப் பணி ஆலோசகர்களுக்கு மட்டுமே அபராதம் விதிக்கப்பட்டது.



விஜயபாரதம்

## எமோஜிக்கு பத்வா



விஜயபாரதம்

வங்கதேசத்தைச் சேர்ந்த அகமதுல்லா என்ற முஸ்லிம் மதகுரு, அங்கு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பிரசங்கம் செய்து வருகிறார். மேலும் தனது முகநூல், யு டியூப் உள்ளிட்ட சமூக ஊடகங்களிலும் மத பிரச்சாரம் செய்து வருகிறார். சமீபத்தில், அவர் வெளியிட்ட வீடியோ ஒன்றில், 'முகநூலில், நமது உணர்வுகளை வெளிப்படுத்த எமோஜி உருவங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஒருவர் வேடிக்கையாக தெரிவிக்கும் கருத்திற்கு வேடிக்கையை குறிக்கும் எமோஜியை பயன்படுத்துவது தவறல்ல. ஆனால், ஒருவரின் கருத்தை கிண்டல் செய்யும் நோக்கில், 'ஹாஹா' என சிரிக்கும் எமோஜிக்கள் பயன்படுத்துவது, முஸ்லிம் மார்க்கத்திற்கு எதிரானது. இனி சமூக ஊடகங்களில் என்னை பின்தொடர்வோர், இதனை செய்ய வேண்டாம். எமோஜி பயன்படுத்த தடை விதிக்கப்படுகிறது' என கூறி அதற்கு பத்வா விதித்துள்ளார்.

# மீண்டும் எச்1 பி விசா வாய்ப்பு

அமெரிக்காவில் தகவல் தொழில்நுட்பத் துறை உட்பட சில துறைகளில் வல்லுனர்கள், வேலையாட்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டு உள்ளது. இதன் காரணமாக, தள்ளுபடி செய்யப்பட்ட எச் 1பி விசா விண்ணப்பங்கள் மீண்டும் பரிசீலனை செய்ய அமெரிக்க குடியுரிமை மற்றும் குடியேற்ற சேவைகள் துறை முடிவு செய்துள்ளது. இதனால், கடந்த ஆண்டு விண்ணப்பித்து, எச் 1பி விசா நிராகரிக்கப்பட்டோர், மீண்டும் விண்ணப்பிக்க வாய்ப்பு அளிக்கப் படுவதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

விஜயபாரதம்




# வெளியான டெல்லி ஆக்ஸிஜன் அரசியல்

தீவிர கொரோனா நோயாளிகளுக்கு அத்தியாவத் தேவையான ஆக்ஸிஜன் தேவையை பூர்த்தி செய்ய மத்திய அரசு ஆக்ஸிஜன் தயாரிப்பு அமைப்புகளை நிறுவுதல், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி என பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தது. ஆக்ஸிஜன் பற்றாக்குறை என புலம்பிய மாநில அரசுகளில் முக்கியமானது அரவிந்த் கெஜ்ரிவால் தலைமையிலான டெல்லி அரசு. ஆனால், தற்போது வெளியான ஆக்ஸிஜன் தணிக்கை அமைப்பின் அறிக்கையில், கெஜ்ரிவால் இதில் அரசியல் செய்து வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

**தணிக்கை அமைப்பு:**

கடந்த ஏப்ரல், மே மாதங்களில் ஆக்ஸிஜன் பற்றாக்குறை ஏற்பட்டபோது, மத்திய அரசு உண்மையான ஆக்ஸிஜன் தேவை எவ்வளவு, கையிருப்பு, உற்பத்தி, செலவழிப்பு உள்ளிட்டவற்றை தணிக்கை செய்ய ஒரு தணிக்கைக்குழுவை அமைத்தது.

**அறிக்கைத் தாக்கல்:**

ஆக்ஸிஜன் தணிக்கை அமைப்பு, உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அறிக்கையின்படி, கொரோனா இரண்டாவது அலையின் உச்சக்கட்டமான ஏப்ரல் 25 முதல் மே 10 வரையிலான காலகட்டத்தில், டெல்லியின் ஆக்ஸிஜன் தேவையை நான்கு மடங்காக மிகைப்படுத்தி டெல்லி அரசு கூறியுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. டெல்லிக்கு தேவையே இல்லாமல் அதிகப்படியான ஆக்ஸிஜன் வழங்குவது, ஆக்ஸிஜன் அதிகமாகத் தேவைப்படும் 12 மாநிலங்களுக்கான வழங்கலை பாதித்திருக்கக்கூடும் என்றும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டி உள்ளது.

**உண்மைத் தேவை:**

ஆக்ஸிஜன் வசதிப் படுக்கைகள், நோயாளிகளின் எண்ணிக்கை என்ற கணக்கீட்டு அளவின்படி டெல்லிக்கு ஒரு நாள் தேவை 289 மெட்ரிக் டன் மட்டுமே. ஆனால், 1,140 மெட்ரிக் டன் ஆக்சிஜன் தேவை என்று டெல்லி அரசு பொய்யாக கூறியது. பெட்ரோலிய மற்றும் ஆக்ஸிஜன் பாதுகாப்பு அமைப்பு கூட டெல்லியில் தேவைக்கும் அதிகமாக ஆக்ஸிஜன் இருப்பதாகத் தெரிவித்திருந்தது.

**நீதிமன்றம் தலையீடு:**

ஆக்ஸிஜன் பற்றாக்குறை குறித்து ஆம் ஆத்மி அரசு போலி எச்சரிக்கை எழுப்பியதை அடுத்து அதன் வேண்டுகோளின்படி,

700 மெட்ரிக் டன் விநியோகிக்கவும் அந்த அளவை சரியாக பராமரிக்கவும் மத்திய அரசுக்கு கடந்த மே 5 அன்று நீதிபதி டி.ஒய் சந்திரசூட் தலைமையிலான உச்சநீதிமன்ற பெஞ்ச் உத்தரவிட்டது.

கோரிக்கையை நிராகரித்த கெஜ்ரிவால்:

ஆக்ஸிஜன் அதிகமாகக் கோரப்படுகிறது என அறிந்த மத்திய அரசு கெஜ்ரிவாலிடம் அதனை தணிக்கை செய்ய பலமுறை வேண்டுகோள் விடுத்தும் அதனை நிராகரித்தது. பின்னர் நீதிமன்ற ஆணையை அடுத்து தணிக்கைக்கு ஒப்புக்கொணடது.

**ஆக்ஸிஜன் பதுக்கல்:**

அரவிந்த் கெஜ்ரிவாலின் கட்சியை சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் இம்ரான் ஹுசேன் உட்பட பலர் டெல்லியில் ஆக்ஸிஜன், ஆக்ஸிஜன் சிலிண்டர்களை அதனை அதிக விலைக்கு கருப்பு சந்தையில் விற்று பிடிபட்டனர். மத்திய அரசுக்கு கெட்ட பெயரை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில் ஆக்ஸிஜன் செயற்கை பற்றாக்குறை உருவாக்கப்பட்டது.

**பராமரிப்பின்மை:**

டெல்லி மருத்துவமனைகளில் ஆக்ஸிஜன் அளவுகளை முறையாக பராமரிப்பதில்லை, வீணாக்கப்படுகிறது, தேவைக்கு அதிகமாக நோயாளிகளுக்கு செலுத்தப்படுகிறது என தணிக்கையில் தெரியவந்தது.

**ஊடகங்கள் பங்கு:**

டெல்லியில் அவசரகால ஆக்ஸிஜன் விநியோகத்தையும் மக்களையும் குழப்பும் விதமாக தொடர்ந்து அவநம்பிக்கையான செய்திகளை ஊடகங்கள் பரப்பின. குறிப்பாக பி.பி.சி உட்பட சில மேற்கத்திய ஊடகங்கள் இதில் அதிக தீவிரம் காட்டின.

**அமைச்சர் கண்டனம்:**

தணிக்கை அறிக்கையை சுட்டிக்காட்டிய மத்திய ரயில்வே அமைச்சர் பியூஷ் கோயல், இதுபோன்ற ஒரு மோசமான தவறுக்கு டெல்லி அரசு பொறுப்பு ஏற்க வேண்டும் என கூறியிருந்தார்.

**தொடரும் பதுக்கல்:**

டெல்லி பா.ஜ.க பிரிவு கடந்த ஜூன் 22 அன்று தனது டுவிட்டர் பதிவில், ‘டெல்லியில் ஆம் ஆத்மி கட்சியின் ஆட்சியில், கைவசம் போதுமான தடுப்பூசிகள் இருந்தபோதிலும், அதனை மக்களுக்கு அளிகாமல் பதுக்குகிறது. ஆக்ஸிஜனைப் போலவே செயற்கை பற்றாக்குறையை உருவாக்க முயல்கிறது’ என குற்றம்சாட்டியது.

இது, மத்திய அரசுக்கு கெட்ட பெயர் ஏற்படுத்தும் நோக்கில், வேண்டும் என்றே ஆக்ஸிஜன் அரசியல் செய்து மக்கள் உயிருடன் விளையாடிய அரவிந்த் கெஜ்ரிவால், அடுத்ததாக தடுப்பூசியை வைத்து தனது அரசியல் விளையாட்டை தொடர்கிறார் என்ற உண்மையை வெளிக்கொண்டு வந்துள்ளது.

மதிமுகன்

விஜயபாரதம்





# வலையில் சிக்கிய மீம்கள் . . .




திமுக யாராலும் அடக்கமுடியாத யானை என்பதற்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை



# சித்திரவதை தடுப்பு தினம்

விஜயபாரதம்



மனித சமூகத்தின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படுவதன் மூலமே உலகில் விடுதலை, நீதி, அமைதி ஏற்பட வாய்ப்புண்டு.

சித்திரவதைக்கு ஆளானோருக்கான சர்வதேச ஆதரவு நாள் இன்று. உளவியல் ரீதியாக, உடல் ரீதியாக பல்வேறு சித்திரவதைகளுக்கு ஆளானோருக்கு ஆதரவு தெரிவுக்கும் வகையில் ஐ.நா. அவையினால் ஜூன் 26ம் அன்று அனுசரிக்கப்படுகிறது.

சித்திரவதை என்பது உடலால், உள்ளத்தால் வேதனையை திட்டமிட்டு ஒரு நபர் மீது பிரயோகிப்பது என்று பொருள் கொள்ளப்படுகிறது.

சித்திரவதை பற்றி சமயபுராணக் கதைகளில் இருந்தே நாம் கேட்டிருக்கிறோம். தீமை செய்பவர் நரகத்தில் சித்திரவதை செய்து தண்டிக்கப்படுவர் என அறிந்தவர்கள்தானே நாம். ஹிந்து சைவ சமயக்குரவரான அப்பர்கூட சமணர்களால் சித்திரவதை செய்யப்பட்டார்.

வரலாற்றுச் சம்பவங்களை ஆராயும்போது 15ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில், சித்திரவதைகள் மிக அதிகளவில் நடைமுறையில் இருந்துள்ளது. பின் அது படிப்படியாக குறைவடைந்து மீண்டும் இரண்டாம் உலக யுத்தத்தின் போது மிகப்பரவலாக இடம் பெறத்தொடங்கி இன்றளவும் நீடித்து வருகின்றது.

மனிதரை மனிதர் சித்திரவதை செய்யும் எண்ணம் எவ்வாறு தோன்றியது என்று ஆராயும்போது, மனிதர்களின் பரம்பரை அலகுகளை ஆராய்ந்த மருத்துவர்கள், ஒரு சில மனிதர்கள் பிறக்கும் போதே கொடூரமான இயல்புகளை வெளிப்படுத்துவதற்குரிய குணங்களை கொண்டிருக்கிறார்கள் எனக் கூறுகின்றனர்.

நவீன காலத்தில் சித்திரவதையின் நோக்கங்களாக, செய்த குற்றத்தை ஒப்புக்கொள்ளச்செய்தல், சாதகமான தகவலையறிய தூண்டுதல், தேடப்படுகிறவரைப் பணிய வைத்தல், சரணடைய வைத்தல் எனப் பன்முகப்படுத்தப்பட்ட நோக்கங்களைக் கொண்டதாக உள்ளது.

இன்றைய காலத்தில் தேவைப்பட்ட தகவலைப் பெற வேறுவழிகள் உள்ளபோதும், அத்தகவல்களைப் பெற்ற பின்னரும்கூட சித்திரவதைகள் மேற்கொள்ளப்பட்டு வருவது மனிதனின் அநாகரிகத்தையே வெளிப்படுத்துவதாக உள்ளது.

உலகின் ஆறில் ஐந்து பங்கு நாடுகளில் அரச ரீதியான சித்திரவதைகள் இடம்பெற்றுவருகின்றன. உலகம் முழுவதும் அகதிகளாக உள்ளவர்களில் 10லிருந்து 30 சதவீதமானவர்கள் சித்திரவதைக்கு உள்ளானவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

மனிதனால் மனிதனுக்கு ஏற்படும் சித்திரவதைகள் குறையவே இந்நாள் அனுசரிக்கப்படுகிறது.

சிந்துஜா

# போதைப்பொருள் ஒழிப்பு தினம்




ஒவ்வொரு ஆண்டும் போதைப்பொருள் மற்றும் சட்டவிரோத கடத்தலுக்கு எதிரான சர்வதேச தினம் (ஜூன் 26) இன்று அனுசரிக்கப்படுகிறது. போதைப் பொருள் பயன்பாட்டால் உலகெங்கிலும் ஏற்படும் கலாச்சாரம் மற்றும் பொருளாதார சீரழிவுகள் குறித்த விழிப்புணர்வை மக்களிடம் பரப்ப இது ஐ.நா சபையால் முன்மொழியப்பட்டது..

'தவறான தகவல்களை எதிர்த்துப் போராடுவது போதைப்பொருள் குறித்த உண்மைகளைப் பரிமாறிக் கொள்வது' என்பது போதைப்பொருள் மற்றும் சட்டவிரோத கடத்தலுக்கு எதிரான 2021ம் ஆண்டின் கருப்பொருளாக உள்ளது.


உலகெங்கிலும் உள்ள தனிநபர்கள், குறிப்பாக குழந்தைகள் மற்றும் பதின்ம வயதினரிடையே பொறுப்புணர்வுவை ஏற்படுத்த பிரச்சாரம்மேற்கொள்ளப்படுகிறது. போதைப்பொருளால்விளையும் பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக பள்ளிகள், கல்லூரிகள், பணியிடங்கள் மற்றும் பொது இடங்களில் பேச்சு, நாடகம், போட்டிகள், கட்டுரை என பல்வேறு வழிகளில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

உலகம் முழுவதும் சிறுவர்கள், பெரியவர்கள் என 20 கோடிக்கும் அதிகமானோர், போதை பொருட்களுக்கு அடிமையாக இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மது, புகையிலை பொருட்களை உபயோகிப்பது சாதரமாண நிலையில், கஞ்சா, அபின், கோகைன், பிரவுன்சுகர் போன்றவை கரையான் புற்றுபோல் இளைஞர் சமூதயத்தை அழித்து வருகிறது. கட்டுக்கோப்பான உடல் வைத்திருக்க வேண்டியவர்கள் இளமையிலே நரம்பு தளர்ச்சி, உடல் சோர்ந்து போய் கிடக்கும் கொடுமையை என்னவென்று சொல்வது?

வேடிக்கை விளையாட்டாய் தொடங்கிய மது பழக்கம், பின்பு போதை பழக்கமாக மாறி விடுகிறது. பின் உடலில் ஏற்படும் ரசாயன மாற்றத்தால், போதை பொருள் உபயோகத்தின் அளவும் கூடிவிடும். உடல்நலமோ அடியோடு கெட்டுவிடும். மதுப்பழக்கமும் ஆரோக்கியமும் ஒன்றுக்கு ஒன்று இணக்கமில்லாதவை. போதைப்பழக்கம் மிக மோசமாக உடல்நிலையைப் பாதித்திருக்கும்.

வாழ்க்கை முறையில் மாற்றம், வாழ்க்கையில் உங்களை முன்னேற்றிக்கொள்ள உதவும் நடவடிக்கைகள், சரியான மருத்துவ ஆலோசனைகள், நல்ல சூழல் போன்றவை போதைப்பழக்கம் மறக்க உதவும் வழிமுறைகளில் முக்கியமானவை.

மணிவாசகன்



விஜயபாரதம்

# ம.பொ. சிவஞானம்

தமிழகத்தைச் சேர்ந்த இந்திய விடுதலைப் போராட்ட வீரரும் சிறந்தத் தமிழறிஞருமான மயிலாப்பூர் பொன்னுசாமி சிவஞானம், ம.பொ.சி என அனைவராலும் அறியப்படுபவர். சிலப்பதிகாரத்தின் மீது இவர் கொண்டிருந்த அபாரப் பற்று மற்றும் ஆழ்ந்த ஞானத்தின் காரணமாக இவர் சிலம்புச் செல்வர் ம.பொ.சி என அழைக்கப்பட்டார்.

சென்னை ஆயிரம்விளக்குப் பகுதியிலுள்ள சால்வன் குப்பம் என்ற பகுதியில் 26/6/1906 அன்று பிறந்தார். மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த இவரின் பள்ளிப்படிப்பு மூன்றாம் வகுப்போடு முடிந்தது. நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றார். காங்கிரஸ் கட்சியின் சிறந்த மேடைப் பேச்சாளராக திகழ்ந்தார். காங்கிரஸ் கட்சி நடத்திய பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு எழுநூறு நாட்களுக்கு மேல் சிறையில் இருந்தார். ம.பொ. சி. தன் சிறைவாசத்தைச் சிலப்பதிகாரத்தைக் கற்றுக்கொள்ளப் பயன்படுத்தினார். தமிழரசுக் கழகம் என்ற இயக்கத்தை தொடங்கினார்

தேசியத்தைப் போற்றினாலும் தமிழின் பெருமை பேச அவர் தவறவில்லை. விடுதலைக்குப் பின் இந்தியா மொழிவாரி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டபோது, தமிழின் தகுதியை தமிழினத்தின் சிறப்பை எடுத்துரைப்பதில் நாட்டம் காட்டினார். ஆகஸ்ட் 8, 1954 ஆம் ஆண்டில், ம.பொ.சி. காங்கிரசிலிருந்து விலகினார். மெட்ராஸ் ஸ்டேட் என்பதை மாற்றி தமிழ்நாடு என்ற பெயரை வைக்கப் போராடினார்.

மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்டபோது ஆந்திரர்கள் சென்னையைக் கேட்டபோது, அதனை எதிர்த்துப் போராடித் தமிழகத் தலைநகராகச் சென்னையை தமிழகத்தோடு இருக்க காரணமானவர். திருவேங்கடத்தையும் (திருப்பதி) தமிழகத்துடன் இணைக்கப் போராடினார். அப்போராட்டத்தால் திருத்தணி தமிழகத்துக்கு கிடைத்தது. குமரி மாவட்டம், செங்கோட்டை, பீர் மேடு, தேவிக்குளம் போன்றவை தமிழகத்துக்கு கிடைக்கப் போராடினார்.

தமிழக முதல் அமைச்சராக எம்.ஜி.ஆர் இருந்தபோது ம.பொ. சி.யை தமிழக சட்டமன்ற மேலவையின் தலைவராக நியமித்தார். பட்டமளிப்பு விழாக்களில் கருப்பு உடை அணிந்து கருப்புத் தொப்பியும் வைத்தவர்கள்தான் கலந்துகொள்ள முடியும். தமிழ்ப் பண்பாட்டில் ஊறித் திளைத்த ம.பொ.சி.யால் இதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தமிழகத்தின் உடையான வேட்டி, சட்டையோடுதான் வருவேன் என்பதில் உறுதியாக இருந்தார்.